மனைவி—செத்தவர் செத்தவர் தான்—மற்ற மாநிலத்திலே இரண்டு பேர்கள் செத்து இருக்கிறார்கள் என்று சொல்லி நம்முடைய மாநிலத்திலே ஒருவர்தான் செத்திருக்கிறார் என்று இருக்க முடியாது. லாங் டிஸ்டன்ஸ் பஸ்கள் எல்லாம் போய்வந்து அரை மணி நேரத்திற்குள்ளாக மெயின்டெயின் பண்ணப்பட்டு உடனே —ஒன் ஹவரிலே—மறுபடியும் ஓடிக் கொண்டிருக்கின்ற நிலைமை இருக்கிறது. லேட்டாக வந்தால்—வித்-இன் பிப்பிடின் மினிட்ஸ் ஷெட்டுக்கு வருகிறது, உடனே கொஞ்ச நேரத்திலே மெயின் டெயின் பண்ணப்பட்டு அனுப்பப்படுகிறது. இதனால் ஆக்சிடன்ட்ஸ் ஏற்படுகிறது. இப்படி கேப்ஸ் இல்லாத காரணத்தினாலே பல விபத்துக்கள் நடக்கின்றன. ஆகவே இதை சீரியஸாக எடுத்துக்கொண்டு இவைகளை மாற்றியமைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, மற்ற மாநிலங்களை ஒப்பிடுவது ஒரு உதாரணத்திற்காகத் தானே தவிர இங்கே குறைவாக இருக்கிறது, ஆகவே பரவாயில்லை என்று அரசாங்கம் நினைத்துக் கொண்டிருக்கிற நிலை இல்லை. அதுவும் கூட நடக்கக் கூடாது என்ற முறையிலே உங்களைவிட அரசாங்கம் அதிகமான அக்கறை எடுத்துக் கொண்டு இருக்கிறோம். விரைவுப் பேருந்துகளை பொறுத்தவரையில் சரியான நேரம் கொடுக்க வில்லை என்று சொன்னார்கள். 10 சதவீதம் ஸ்பேர் பஸ் வைத்திருக்கின்ற நிலையைக் கூட நாம் மாற்றி இப்போது 15 பஸ்கள் வைத்திருக்கின்ற நிலையை ஏற்படுத்தியிருக்கிறோம். ஒவ்வொரு பேருந்தும் வாரத்திலே ஒரு நாள் கட்டாயம் நிறுத்தப் படுகிறது. ஆகவே பராமரிக்கப்படுகின்ற ஏற்பாடுகளை நாம் செய்து இருக்கிறோம்.

சேலம் மாவட்டத்தில் சந்தன ஊதுபத்தி தயாரிக்கும்
தொழிற்சாலை ஏற்படுத்தும் திட்டம்

*வினா எண் 697—செல்வி ப. விசயலட்சுமி: மாண்புமிகு கதர் மற்றும் பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டத்தில் சந்தன ஊதுபத்தி தயாரிக்கும் தொழிற்சாலை தொடங்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : இத்தகைய திட்டம் தற்சமயம் பரிசீலனையில் இல்லை.

செல்வி ப. விசயலட்சுமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது சேலம் மாவட்டத்தில் தனியார் யாராவது சந்தன ஊதுபத்தி செய்கிறார்களா ? அவர்களுக்கு சந்தன ஊதுபத்தி செய்வதற்கு அரசு உதவி செய்ய முன் வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்தில் தற்சமயம் ஒன்பது தனியார் நிறுவனங்கள் ஊதுபத்தி தொழிலுக்காக பதிவு செய்து ஊதுபத்தி தயாரித்து வருகின்றன. ஆனால் மேற்படி நிறுவனங்கள் சந்தன ஊதுபத்தி உற்பத்தி செய்வதில்லை. இம்மாவட்டத்தில் இரண்டு நிறுவனங்கள் சந்தனக் கட்டையிலிருந்து சந்தன எண்ணெய் உற்பத்தி செய்து வருகின்றன. மேற்கூறிய நிறுவனங்கள் சந்தனக் கட்டையிலிருந்து சந்தன எண்ணெய் எடுத்த பிறகு மீதமுள்ள சந்தனக் கழிவு சக்கைகளை பெங்களூரில் உள்ள ஊதுபத்தி தயாரிக்கும் நிறுவனங்களுக்கு சந்தன ஊதுபத்தி செய்ய விற்பனை செய்து வருவதாகக் தெரிகிறது. தற்சமயம் இயங்கி வரும் ஊதுபத்தி தொழில் நிறுவனங்கள் சந்தன ஊதுபத்தி தயார் செய்ய முன் வந்தால் அந்நிறுவனங்களுக்கு சந்தன ஊதுபத்தி உற்பத்தி செய்யத் தேவையான தொழில் நுட்ப அறிவுரைகளும் உதவிகளும் சேலம் மாவட்டத் தொழில் மையம் மூலம் அளிக்கப்படும்.

செல்வி ப. விசயலட்சுமி : தலைவர் அவர்களே, இந்த சந்தன ஊதுபத்தி தயாரிக்கும் தொழிற்சாலை வேறு எந்த மாவட்டத்தில் நடைபெற்று வருகிறது ? அதேபோல் சந்தன ஊதுபத்தி தயாரிக்க தனியார்கள் முன் வந்தால் கதர் வாரியம் அதற்கு உதவிட முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : தலைவர் அவர்களே, தற்சமயம் தர்மபுரி மாவட்டத்திலே ஆஞ்செட்டி என்ற ஊரில் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின்கீழ் ஊதுபத்தி குச்சிகள் தயாரிக்கும் தொழிலியல் கூட்டுறவுச் சங்கம் ஒன்று இயங்கி வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதைப் போல் மேலும் புதியதாக ஊதுபத்தி தொழில் தொடங்க முன்வரும் தொழில் முறை முனைவர்களுக்கு சந்தன ஊதுபத்தி தொழில் தொடங்க தொழில் நுட்ப அறிவுரைகளும் உதவிகளும் செய்யப்படும்.

Raising the existing Protection Walls for Sea erosion in Nagapattinam

Q. No.—698 THIRU R. UMANATH: Will the Hon. the minister for Khadi and Public works be please to state:

(a) Whether the Government has any proposal to raise the existing protection walls for sea erosion in Nagapattinam town, and

(b) if so, the details therof?